# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்

**விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச சமவாயத்திற்குப் பயனளிப்பதற்கும் ; ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையைத் தாபிப்பதன் மூலம் சொல்லப்பட்ட சமவாயத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்கூறப்பட்ட சமவாயத்தின் கட்டுக்கோப்பிற்குள் விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டை எதிர்த்து நிற்பதற்கு ஏற்புடைத்தான உள்ளூர் சட்டச் செயலமைப் பொன்றைக் குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*விளையாட்டுத்துறை அமைச்சரால் 2013, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **267 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்

*ச.வ.ஒ. 17/2011*

***விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச சமவாயத்திற்குப் பயனளிப்பதற்கும் ; ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையைத் தாபிப்பதன் மூலம் சொல்லப்பட்ட சமவாயத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்கூறப்பட்ட சமவாயத்தின் கட்டுக்கோப்பிற்குள் விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டை எதிர்த்து நிற்பதற்கு ஏற்புடைத்தான உள்ளூர் சட்டச் செயலமைப் பொன்றைக் குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மான ஒரு சட்டம்***

*முன்னுரை.*

விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச சமவாயமொன்று (இதனகத்துப்பின்னர் “சமவாயம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் பத்தொன்பதாம் நாளன்று பாரிஸ் நகரில் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார ஒழுங்கமைப்பின் (UNESCO) பொது மாநாட்டில் ஏற்றங்கீகரிக் கப்பட்டுள்ளதாதலாலும்:

இலங்கை அரசாங்கம் இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு பெப்புருவரி இருபத்து நான்காம் நாளன்று மேற்கூறப்பட்ட சமவாயத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதுடன், ஒப்புதல் சாசனமானது இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு மாச்சு ஒன்பதாம் நாளன்று பணிப்பாளர் நாயகத்திடம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாதலாலும் :

மேற்கூறப்பட்ட சமவாயம் இலங்கை தொடர்பில் இரண்டாயி ரத்துப் பதினோராம் ஆண்டு மே முதலாம் நாளன்று வலுவுக்கு வந்துள்ளதாதலாலும் :

2-PL 007660 -225 (2013/08)

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்

மேற்கூறப்பட்ட சமவாயத்தின்கீழான இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு உள்ளூர் சட்டவாக்க ஏற்பாடுகளை ஆக்குவது இலங்கை அரசாங்கத்திற்கு அவசியமாகவிருக்கின்றதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சட்டம் எந்த ஆட்களுக்கு ஏற்புடைத்தாகும் என்பது.

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவோர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத் துறைச் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்களாகவிருக்கின்ற எல்லா ஆட்கள் ;

(ஆ) ஏதேனும் தேசிய கழகத்தின் இணைந்த உறுப்பினராக இருக்கின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு, களரி, அணி, கழகம் அல்லது ஒன்றியம் ;

(இ) தேசிய விளையாட்டுக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்படும், நடாத்தப்படும், கூட்டப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் செயற்பாட்டில் பங்குபற்றும் ஒவ்வோராளும் அல்லது எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு ;

(ஈ) அவருடன் உடன் செல்லும் எவரேனும் உறுப்பினர் உள்ளடங்கலாக ஏதேனும் மட்டத்திலான "விளையாட்டு வீரர் ஒருவரை" பயிற்றுவித்தலுடன் தொடர்புடைய ஆள் ஒவ்வொருவருக்கும் ;

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நடைபெறும் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் (பராயமடையாதவர்கள் உட்பட).

## பாகம் I

### தவறுகள்

*தவறுகள்.*

**3.** (1) (அ) தடைசெய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தைத் தூண்டுகின்ற, விநியோகிக்கின்ற, ஊட்டுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையை பயன்படுத்துகின்ற அல்லது பிரயோகிக்கின்ற ;

(ஆ) எவரேனும் விளையாட்டு வீரரின் மாதிரிப் பொருளில் அதன் ஊன்மச் சிதைவுகளை அல்லது அதன் குறியீடுகளை தூண்டுகின்ற அல்லது அறிமுகம் செய்கின்ற ;

(இ) விளையாட்டில் ஏதேனும் மிருகத்தில் ஏதேனும் தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையைப் பயன்படுத்துகின்ற அல்லது பிரயோகிக்கின்ற ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எண்ணத்துடன் ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையை விளையாட்டில் அவரது உடமையில் வைத்திருந்து விளையாட்டில் ஈடுபடுகின்ற ;

(உ) விளையாட்டில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையினை விலைப்படுத்துதலில் ஈடுபடுகின்ற,

எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

"விலைப்படுத்துதல்" என்பது -

(i) விற்றல், கொடுத்தல், கொள்முதல் செய்தல், கொண்டு செல்லுதல், அனுப்புதல், விநியோகித்தல் அல்லது வழங்குதல் ; அல்லது

(ii) (i) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொன்றைச் செய்வதற்கான முனைவைச் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட தவறொன்றை-

(அ) புரிவதற்கு எத்தனிக்கின்ற ;

(ஆ) புரிவதற்கு உதவுகின்ற மற்றும் உடந்தையாயிருக்கின்ற; அல்லது

(இ) புரிவதில் இன்னோராளுடன் சூழ்ச்சி செய்கின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இந்த உட்பிரிவில் -

"புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற" என்பது தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம் பிரிவில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"சூழ்ச்சி செய்கின்ற" என்பது தண்டனைச் சட்டக் கோவையின் 113அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாகவிருக்கின்ற ஆளொருவர் குற்றஞ் சாட்டப்பட்டதன்மீது, விளக்கத்தின்மீது, மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இரண்டு ஆண்டுகளுக்கு விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட உறுப்பினரொருவர் விளையாட்டு சூழலில் உறுப்பினரொருவராக இருக்குமிடத்து அவரது செயற்பாடுகள் மீது குறித்தசில ஆண்டுகளுக்குத் தடையொன்றை விதிக்கலாம்.

மேல் நீதிமன்றம் இச்சட்டத்தின் கீழான தவறுகளை விசாரணை செய்தல்.

**4.** (1) வேறேதேனும் சட்டத்தில் அதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் கொழும்பில் நடைபெறும் இலங்கை மேல் நீதிமன்றம் அல்லது மேல் மாகாணத்திற்கென அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டு கொழும்பில் நடைபெறும் மாகாண மேல் நீதிமன்றம் இச்சட்டத்தின்கீழான தவறுகளை விசாரணை செய்வதற்கு புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமையும் செயலொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேல் நீதிமன்றம் -

(அ) அத்தகைய செயலைப் புரிந்த ஆள் இலங்கையில் சமூகமாயிருப்பின் ;

(ஆ) அத்தகைய செயல் இலங்கைப் பிரசையொருவரால் புரியப்பட்டிருப்பின் ;

(இ) அத்தகைய செயல் இலங்கை அரசாங்கத்தினால் தொழிற்படுத்தப்படும் வானூர்தியொன்றில் புரியப்படின் ; அத்துடன்

(ஈ) எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆள் இலங்கைப் பிரசையொருவராக இருப்பின்,

அத்தகைய தவறு இலங்கையினுள் புரியப்பட்டாற்போன்று, அத்தகைய தவறை விசாரணை செய்வதற்கான நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் II

### நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகள்

*நோய் தீர்க்கும் பாவனைக்கு விலக்களிப்பு.*

**5.** *(1)* நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பொன்று (இதனகத்துப்பின்னர் ''ரியுஇ'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையினால் ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றும்பொழுது விளையாட்டு வீரரால் தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்றின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையொன்றின் பயன்பாட்டை அனுமதித்து விளையாட்டு வீரரொருவருக்கு வழங்கப்படலாம்.

*(2)* சொல்லப்பட்ட ரியுஇ தமக்கு கிடைக்கச் செய்யப்படுவதை தேவைப்படுத்தும் விளையாட்டு வீரர் ஒருவர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மைக்கு, ஒழுங்கு விதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் தேவைப் படுத்தப்பட்ட எத்தேதியன்று அங்கீகாரம் தேவைப்படுகின்றதோ அந்தத் தேதிக்கு முன்னரான முப்பது நாட்களுக்கு குறையாமல் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். விளையாட்டு வீரர் அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்து மருத்துவச் சான்று மற்றும் ஆதாரமளிக்கின்ற ஆவணங்கள் எல்லாவற்றையும் முகவராண்மைக்கு அனுப்புதல் வேண்டும்.

*(3)* ரியுஇ ஒன்றை கருத்திற் கொள்வதற்கும் வழங்குவதற்கும் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான வேறு எவையேனும் கருமங் களையும், நடவடிக்கை முறைகளையும் அல்லது ஆவணங் களையும் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

**6.** (1) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி விளையாட்டு வீரர் ஒருவரால் செய்யப்பட்ட ரியுஇ ஒன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது மீளாய்வு செய்யும் நோக்கத்திற்கென அத்தகைய முகவராண்மையால் தாபிக்கவும் நியமிக்கவும் படவேண்டிய "நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களித்தல் குழு" வினால் (இதனகத்துப்பின்னர் "ரியுஇ குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மீளாய்வு செய்யப்படுவதற்கென அத்தகைய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*ரியுஇ ஒன்றை வழங்கு வதற்கான நடவடிக்கை முறை.*

(2) ரியுஇ குழுவானது பிணி ஆய்வு, விளையாட்டு, உடற் பயிற்சி மருத்துவத்தில் அனுபவம் கொண்ட வைத்தியர்களாக இருக்கின்றவர்களான மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும். உறுப்பினர்கள் நியமிக்கப்படும் நேரத்தில் உளதாயிருக்கக்கூடிய ஏதேனும் முரணான அக்கறையை வெளியிடுதல் வேண்டும். அதன்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையானது, அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு வேறோர் ஆளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) ரியுஇ குழு-

(அ) தீவிரமான அல்லது தீராத மருத்துவ நிலைமையொன்றின் சிகிச்சை செயல்முறையில் தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை மறுக்கப்படின் விண்ணப்பத்தைச் செய்கின்ற விளையாட்டு வீரர் பாரதூரமான சுகாதாரக்கெடுதலை அனுபவிப்பாராயின் ;

(ஆ) சட்டமுறையான மருத்துவ நிலைமையொன்றிற்கான சிகிச்சையையடுத்து விளையாட்டு வீரர் வழமையான சுகாதார நிலைக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்படக்கூடியதைத் தவிர, தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாடானது, அவரது செயற்பாட்டில் மேலதிக மேம்பாடு எதனையும் உண்டுபண்ணமாட்டாது என விளையாட்டு வீரரால் குழு திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படின் :

ஆயினும் எவையேனும் உள்ளீடான தண்டு வளர்ப் பகுதியின் உட்சுரப்பு நீரின் ''வழமையான தாழ்ந்த'' மட்டங்களை அதிகரிப்பதற்கான ஏதேனும் தடைசெய் யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாடானது, ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நோய்தீர்க்கும் தலையீடொன்றாகக் கருதப்படா திருத்தல் வேண்டும் ;

(இ) அச்சூழ்நிலைகளில் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாட்டைத் தவிர, விளையாட்டு வீரருக்கு நோய் தீர்க்கும் நியாய மான மாற்றுவழி எதுவும் இல்லையெனில் ; அத்துடன்

(ஈ) வேறுவகையில் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பாவனைக்கான அவசியமானது ரியுஇ ஒன்றைப் பெறாமல் பாவனை யின் நேரத்தில் தடைசெய்யப்பட்டிருந்த பதார்த்தமொன் றின் அல்லது முறையொன்றின் முன்கூட்டிய பாவனை யொன்றின் முழுமையான அல்லது பகுதியளவிலான விளைவொன்றாக இராதவிடத்து,

மட்டுமே, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மைக்கு ரியுஇ ஒன்றை வழங்குவதற்கு விதப்புரை செய்தல் வேண்டும்.

(4) முடிவொன்றுக்கு வருகையில் குழுவானது, இது தொடர்பில் ''நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புக் குழுவின் முடிவுகளுக்கு ஆதாரமாகவிருக்கின்ற மருத்துவத் தகவல்'' என் னும் தலைப்புடைய ஆவணத்தில் அடங்கியுள்ளவாறு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மையின் (இதனகத்துப்பின்னர் ''டப்ளியு ஏ டி ஏ'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப் பிற்கான சர்வதேச நியமத்தின் ஏற்பாடுகளாலும் மற்றும் நோய் நிர்ணயம் மற்றும் சிகிச்சை அத்துடன் ரியுஇ இன் செல்லுபடியா கும் தன்மையின் காலவரையறை தொடர்பான விவாதம் என்பவற்றாலும் வழிநடத்தப்படுதல் வேண்டும்.

(5) சான்றையும் ரியுஇ இற்கு ஆதாரமான ஆவணங்களையும் கருத்திற்கொண்டு ரியுஇ குழு ஒன்றில் வேண்டப்பட்ட ரியுஇ இன் அளிப்பை விதந்துரைத்து அன்றேல் அளிப்புக்கு மறுப்புத் தெரிவித்து, அதன் விதப்புரையை ஊக்கு பதார்த்தப் பயன் பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மைக்கு அனுப்புதல் வேண்டும். ரியுஇ குழுவானது அத்தகைய விதப்புரையில் அதன் முடிபுக்கான காரணங்களைத் தருதல் வேண்டும்.

*ரியுஇ யின் வழங்கீடு.*

**7**. (1) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையானது குழுவால் அதற்கு அனுப்பப்பட்ட விதப்புரை கிடைக்கப்பெற்றதன்மீது, அங்கீகாரத்தை அளித்து ரியுஇ யை அளித்தல் வேண்டும் அல்லது குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுடன் விண்ணப்பத்தை நிராகரித்தல் வேண்டும்.

(2) ரியுஇ யானது எந்த தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடை செய்யப்பட்ட முறை தொடர்பில் ரியுஇ அளிக்கப்படு கின்றதோ, அந்த தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தையும் அல்லது தடைசெய்யப்பட்ட முறையையும், அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய விலக்களிப்பின் காலப்பகுதியையும் அத்துடன் வேறு எவையேனும் நிபந்தனைகளையும் தெளிவாகத் தருதல் வேண்டும்.

*ரியுஇ ஒன்றை இரத்துச் செய்தல்.*

**8**. சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கப் பட்ட ரியுஇ ஒன்று -

(அ) ரியுஇ எந்த விளையாட்டு வீரருக்கு அளிக்கப்பட் டுள்ளதோ அந்த விளையாட்டு வீரர் எந்தத் தேவைப் பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையால் ரியுஇ அளிக்கப்பட்டுள்ளதோ, அந்த எவையேனும் தேவைப்பாடுகளுடன் அல்லது நிபந்தனைகளுடன் உடனடியாக இணங்கியொழுகா விடில் ;

(ஆ) எந்த காலப்பகுதியின் ரியுஇ அளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் காலப்பகுதி முடிவுற்றிருப்பின் ; அத்துடன்

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் முடிபானது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மமையின் நேர்மாறாக்குதலுக்கு அமைவானதாக இருப்பின்,

இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

*ரியுஇ யின் ஏற்புடைத் தாகும் காலப் பகுதியை நீடித்தல்.*

***9***. *எந்தக் காலப்பகுதிக்கென ரியுஇ அளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் காலப்பகுதியின் முடிவில் எந்த தடைசெய்யப்பட்ட பதார்த்தத்திற்கு அல்லது முறைக்கு ரியுஇ அளிக்கப்பட்டதோ, அந்தத் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது முறையை* இன்னமும் பாவிக்குமாறு விளையாட்டு வீரர் ஒருவர் தேவைப் படுத்தப்படுவாராயின், மேலே தரப்பட்டுள்ள முறையில் மேலும் ஒரு விண்ணப்பம் செய்யப்படலாம்.

# பாகம் III

## ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையைத் தாபித்தல்

*ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான இலங்கை முகவராண்மை யைத் தாபித்தல்.*

***10***. *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை என அழைக்கப்படவேண்டிய முகவராண்மையொன்று (இதனகத்துப் பின்னர் "முகவராண்மை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக் கப்படுதல் வேண்டும்.

*(2)* முகவராண்மை *(1)* ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட பெயரால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

*முகவராண்மை யின் குறிக்கோள்கள்.*

***11***. முகவராண்மையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டை ஒழிப்பதற்குத் தேவைப்பட்டவாறான அத்தகைய வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ;

(ஆ) விளையாட்டுத் தொடர்பில் ஊக்கு பதார்த்தப் பயன்பாடு என்ற துறையினையிட்டு ஆராய்ச்சியையும் மற்றும் முகவராண்மைக்கும் அதனையொத்த பணிகளை நிறைவேற்றும் ஏனைய சர்வதேச ஒழுங்கமைப்புக்களுக்குமிடையில் இருவயினொத்த சோதனையையும் ஊக்குவித்தல்.

முகவராண்மையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்.

**12.** முகவராண்மையின் அதன் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் அவசியப்படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக பின்வருவன எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்வதற்கான தத்துவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகளைத் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல் அத்துடன் கண்காணித்தல் ;

(ஆ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறல்களுக்கெதிராக வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ;

(இ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல் (விற்பனை மூலமாகவாயினும்சரி, நன்கொடை மூலமாகவாயினும் சரி அல்லது வேறுவகையிலாயினும் சரி), வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(ஈ) ஏதேனும் வங்கியில் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தலும் பேணுதலும் ;

(ஊ) இலங்கையிலாயினும்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினும்சரி, ஆட்களிடமிருந்து அல்லது ஆட்களின் குழுக்களிடமிருந்து மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஊ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் ;

(எ) முகவராண்மைக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தை முதலீடு செய்தல் ;

(ஏ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத் தொகை களைக் கடனெடுத்தல் ;

(ஐ) இச்சட்டத்தின்கீழ் முகவராண்மையின் பணிகளை நிறை வேற்றுவதற்கு அவசியமானவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், அவர்களுக்கு வேதனம் வழங்குதல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல், அத்துடன் அவர்களைப் பதவி நீக்கம் செய்தல் ;

(ஒ) முகவராண்மையால் வழங்கப்பட்ட சேவைகளுக்கும் உதவிகளுக்கும் கட்டணங்களை அறவிடுதல் ; அத்துடன்

(ஓ) முகவராண்மையின் அபிப்பிராயப்படி, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கு அவசியமான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

முகவராண்மையின் நிர்வாகம் சபைக்கு உரித்தாக் கப்படுதல்.

**13.** (1) முகவராண்மையின் அலுவல்களின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பன ஆளுநர்கள் சபையொன்றுக்கு (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, முகவராண்மையின் அலுவல்களை நிர்வகிக்கும் நோக்கத்திற்கு இச்சட்டத்தால் முகவராண்மைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம்.

**14.** (1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :- சபையின் அமைப்பு.

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(i) விளையாட்டு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலரொருவர் ;

(ii) விளையாட்டு அபிவிருத்திப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(iii) தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(iv) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) சட்டம், விளையாட்டுத்துறை மருத்துவம் அத்துடன் விளையாட்டுத்துறை விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புகழ்பெற்ற அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்கள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவர்).

(2) அமைச்சர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தவிசாளர் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) ஆளொருவர் -

(அ) விடயத்திற்கேற்ப, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது அவ்வாறு வருமிடத்து ; அல்லது

(ஆ) முகவராண்மையால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் உரிமையை அல்லது அனுகூலத்தைக் கொண்டிருப்பின் அல்லது அனுபவிப்பின் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனை பங்கப்படுத்தும் வகையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருப்பின்,

அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

சபையின் கடமைகள்.

**15**. முகவராண்மையின் குறிக்கோள்கள் தொடர்பிலான எவையேனும் அல்லது எல்லா விடயங்கள்மீதும் அத்துடன் மதியுரைக்கென அமைச்சரால் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் விடயத்தின்மீதும் அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் சபையின் கடமையாதல் வேண்டும்.

சபைக்கு விசேட அல்லது பொதுவான பணிப்புக்களை வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**16**. அமைச்சரானவர், சபையின் தத்துவங்களைப் பிரயோகித்தல் அத்துடன் கடமைகளை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் காலத்துக்காலம் விசேட அல்லது பொதுவான பணிப்புக்களை வழங்கலாமென்பதுடன், சபையானது அத்தகைய பணிப்புக்களுக்கும் பயன்கொடுத்தலும் வேண்டும்.

**17.** (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர் களின் பதவிக் காலம்.*

(2) அமைச்சர், அவ்வாறு செய்தல் அவசியமானதெனக் கருதினால், அதற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுடன், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அப்புறப்படுத்தலாம்.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டெழுதப்பட்ட கடிதமொன்றின்மூலம் எந்த நேரத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(4) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறப்பினால், பதவிதுறப்பதனால், பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குவதன் விளைவாக, சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோர் ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் இறப்பினால், பதவிதுறத்தலினால், பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அல்லது வேறுவகையில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோர் ஆள் நியமிக்கப்படுமிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், சபையின் எந்த உறுப்பினரை அவர் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகயீனம், பலவீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக, தற்காலிகமாக அவரது கடமைகளை நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென வேறோர் ஆள் நியமிக்கப்படலாம்.

(7) விடுமுறையின்றி தொடர்ச்சியாக சபையின் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமாயிராத சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

*சபையின் கூட்டங்கள்.*

**18.** (1) தவிசாளர் அல்லது தவிசாளர் இல்லாதவிடத்து துணைத் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளரும் துணைத் தவிசாளரும் சமுகமாயிராதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சரிசமமாக இருக்கும்பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டங்கள் தவிசாளரால் கூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் முகவராண்மையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகின்றவாறு அடிக்கடி நடாத்தப்படுதலும் வேண்டும்.

(4) சபையின் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) சபை எவரேனும் உறுப்பினருக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனத்தை அல்லது படியை, அமைச்சரின் அங்கீகாரத்துடன் செலுத்தலாம்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அதன் கூட்டங்களை நடத்துதல் தொடர்பிலும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் தொழில் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலும் கடைப்பிடிக்கப் படவேண்டிய நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துகின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். சபையானது இது தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

**19.** முகவராண்மை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங் கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள் முகவராண்மை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.*

**20.** முகவராண்மையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர் களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் மற்றும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*முகவராண்மை யின் அலுவலர்களும் சேவை யாளர்களும் பகிரங்க சேவையாளர் களாக இருத்தல் வேண்டும்.*

**21.** அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பது எவ்வாறிருப்பினும், 17 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபை செயலாற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அத்தகைய ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடி யற்றதாதலுமாகாது.

*ஏதேனும் வெற்றிடம் அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு இருப்பதன் காரணமாக சபையின் நடவடிக்கை முறை செல்லபடி யற்றதாத லாகாது.*

**22.** (1) சபையானது, முகவராண்மையின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவராக மருத்துவம் அல்லது விளையாட்டு மருத்துவம் ஆகிய துறையில் சிறந்த தகுதியானதும் முறையான துமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன், இவர் மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு முகவராண் மையின் பிரதம நிறைவேற்று அலுவலராகவிருத்தலும் வேண்டும். அத்துடன் மீள் நியமனத்துக்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதி பதியின் நியமனம்.*

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், சபையால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அவரது எவையேனும் தத்துவங்களையும் பணிகளையும் எவரேனும் உறுப்பினருக்கு கையளிக்கலாம்.

குழுக்களையும் குழாம்களையும் தாபித்தல்.

**23.** (1) (அ) சபை இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதில் உதவிசெய்வதற்கு குழுக்களையும் குழாம்களையும் தாபிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆட்களை அத்தகைய ஏதேனும் குழு அல்லது குழாமின் உறுப்பினர்களாகவிருப்பதற்கு தகுதியுடையவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) ஒரு குழு அல்லது குழாம் சபையால் அத்தகைய குழுவுக்கு அல்லது குழாமுக்கு தரப்பட்ட விதிக்கப்பட்டவாறான பணித்துறை நியதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறு அதன் பணிகளை மேற்கொள்ளுதலும் மற்றும் அதன் கடப்பாடுகளை பூர்த்திசெய்தலும் வேண்டும்.

(இ) சபை, அது அவசியமானதெனக் கருதுமிடத்து, பரிசீலனையின்கீழுள்ள குறிப்பிட்ட விடயத்தை இறுதியாக முடிவுசெய்யும் நோக்கத்திற்கு இயைபான துறையில் தேவையான அறிவும் தேர்ச்சித்திறனும் கொண்ட எவரேனும் ஆளை உறுப்பினர் ஒருவராக குழுவுக்கு அல்லது குழாமுக்குச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய ஆள் நிரந்தர உறுப்பினரொருவராக இருத்தலாகாதென்பதுடன், அதன் அலுவல்களின் நெறிமுறையில் எழக்கூடிய ஏதேனும் பிரச்சினை தொடர்பில் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலுமாகாது.

(ஈ) ஏதேனும் குழுவின் அல்லது குழாமின் உறுப்பினர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாதல் வேண்டும்.

(உ) குழுவின் அல்லது குழாமின் உறுப்பினரொருவர் இறக்குமிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து சபையானது இறந்த அல்லது பதவி விலகிய உறுப்பினரை பின்னுறுகின்ற வேறோராளை நியமிக்கலாம் :

ஆயின், அத்தகைய உறுப்பினரின் இடத்தில் அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எந்த உறுப்பினரை பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கு மாத்திரமே பதவிவகித்தல் வேண்டும்.

(ஊ) குழுவின் அல்லது குழாமின் உறுப்பினரொருவர் மற்றுமொரு நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு மாத்திரம் மீள நியமிக்கப்படலாம்.

(எ) மருத்துவத் தொழிலர் ஒருவர் மற்றும் விளையாட்டு நிருவாகியொருவர் அத்தகைய ஒவ்வொரு குழுவுக்குள் அல்லது குழாமுக்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு உறுப்பினரும் குழுவின் அல்லது குழாமின் பாரபட்சமற்ற தன்மையைப் பாதிக்கக்கூடிய அத்தகைய உறுப்பினரின் ஏதேனும் ஈடுபாட்டின் வெளிப்படுத்துகையொன்றையும் செய்தல் வேண்டும்.

(ஏ) குழு அல்லது குழாம் வழக்கு அடிப்படையில் வழக்கொன்றின்மீது ஏதேனும் விசாரணையின்மீது குழுவுக்கு அல்லது குழாமுக்கு உதவுவதற்கும் மதியுரை வழங்குவதற்கும் நிபுணர் ஒருவரை நியமிக்கலாம்.

(ஐ) விளையாட்டு வீரர்கள் அல்லது தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான குழுவின் ஆட்கள், சர்வதேச சம்மேளனம் மற்றும் தேசிய விளையாட்டுத்துறை சம்மேளனம் மற்றும் டபிள்யு எ டி எ என்பன பார்வையாளர்களாக தோற்றுவதற்கும் ஒழுக்காற்றுக் குழாமின் விசாரணைகளில் பங்குபற்றுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஒ) விளையாட்டு வீரர் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவர் விசாரணையொன்றிற்கான உரிமையை எழுத்தில் விட்டுவிடுவதன்மூலம் விசாரணையொன்றைக் கைவிடலாம். விளையாட்டு வீரர் அல்லது தொடர்புடைய ஆள் அத்தகைய கடிதத்தில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையை ஒப்புறுதி செய்தலும் அத்தகைய விளையாட்டு வீரர் அல்லது ஆள் அது தொடர்பில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய மீறுகையின் விளைவுகளை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடுதலும் வேண்டும்.

(ஓ) இப்பிரிவின் நியதிகளின்படியான விசாரணை ஒவ்வொன்றும் சாத்தியப்படக்கூடியவாறு விரைவில், அத்துடன் எந்த விடயத்திலும் குழு அல்லது குழாம் அதன் விசாரணையைத் தொடங்கிய தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவதற்கு முன்னர் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(ஔ) விசாரணையொன்றின் முடிவில் குழுவொன்றின் அல்லது குழாமொன்றின் முடிபு எழுத்தில் தரப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு குழுவினதும் அல்லது குழாமினதும் மூன்று உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு தேதியிடப்படுதலும் வேண்டும். முரண்பாடொன்றின் விடயத்தில், முரண்படும் உறுப்பினர் குழுவின் அல்லது குழாமின் முடிவின் ஒரு பாகமாக அத்தகைய முரண்பாட்டிற்கான அவரது காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(க) குழுவொன்றின் அல்லது குழாமொன்றின் முடிபு ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரருக்கு அல்லது ஆளுக்கு ஏற்புடைத்தான விளைவுகளைத் தருதல் வேண்டும்.

(ங) குழுவொன்றின் அல்லது குழாமொன்றின் முடிபு ஒவ்வொன்றும் விளையாட்டு வீரருக்கு அல்லது ஆளின் குழுவின் உறுப்பினரொருவருக்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான தேசிய குழுமத்திற்கும், சர்வதேச சம்மேளனத்திற்கும், தேசிய விளையாட்டுக் கழகத்திற்கும் மற்றும் டபிள்யு எ டி எ இற்கும் சாத்தியப்படக்கூடியளவு விரைவில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ச) இப்பிரிவின் கீழான விசாரணைகள் தொடர்பில் குழுவொன்றினால் அல்லது குழாமொன்றினால் கடைப்பிடிக்கப் படவேண்டிய நடவடிக்கைமுறைகளைத் தருகின்ற விதிகள் ஆக்கப்படலாம்.

(2) ''இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுக்காற்றுக் குழாம்'' (இதனகத்துப்பின்னர் ''ஒழுக்காற்றுக்

குழாம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) என அழைக்கப்படும் குழாமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) விளையாட்டுகள் என்னும் விடயம் யாருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் தரத்திற்கு குறையாத அலுவலரொருவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) நீதிமன்றத் தோற்றுதல்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற சட்டத்தரணிகளுக்கிடையிலிருந்தான இரண்டு ஆட்கள் பிரதித் தவிசாளர்களாகவிருத்தல் ;

(இ) விளையாட்டு மருத்துவத்துறையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற மருத்துவத் தொழிலாளர்களுக்கிடையிலான மூன்று ஆட்கள் ;

(ஈ) விளையாட்டு நிருவாகத்தில் முன்னனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களிலிருந்தான மூன்று ஆட்கள்.

## பாகம் IV

### ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறல்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைமுறையும் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறையும்

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான விதிமீறலின் நிலைமை.

**24.** சபையானது, 23 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல் தொடர்பிலான ஒழுக்காற்று குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் புலனாய்வின் கண்டறிகையின் அடிப்படையில் -

**விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்**

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாடு பற்றிய சார்த்துகை யொன்றினதும் தற்காலிக இடைநிறுத்தத்தினதும் தற்காலிக விசாரணையினதும் அடிப்படையில் விளையாட்டு வீரர் ஒருவர் தொடர்பில் பாதகமான பகுப்பாய்வு சார்ந்த கண்டறிகையொன்று இருந்துள்ளது;

(ஆ) ஓர் ஒழுங்கீனம் காரணமாக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டு சோதனை வறிதானதாக வெளிப்படுத்தப்படவில்லை ;

(இ) பிரசன்னமாயிருந்த தடைசெய்யப்பட்ட பதார்த்தம் இச்சட்டத்தின் நியதிகளின்படி விளையாட்டு வீரருக்கு அளிக்கப்பட்ட ரியுஇ உடன் ஒத்திசைவானதாக இருக்கவில்லை ;

(ஈ) மாதிரி B பகுப்பாய்வு மாதிரி A யின் கண்டறிகையை ஒத்திருக்கின்றது அல்லது விளையாட்டு வீரர் மாதிரி B யின் பகுப்பாய்வொன்றைக் கோரவில்லை ;

(உ) எல்லாப் பின்தொடர் புலனாய்வுகளும் விளையாட்டு வீரரால் அல்லது வேறு ஏதேனும் ஆளினால் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறலொன்று என்ற முடிவுக்குத் தெளிவாக இட்டுச் செல்கின்றன ; அத்துடன்

(ஊ) விளையாட்டு வீரர் மேலும் புலனாய்வைத் தேவைப் படுத்துகின்ற, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கெதிரான சோதனையின் செல்லுபடியாகும் தன்மையின் மீதான ஏதேனும் தகவலை அல்லது சான்றை வழங்கவில்லை ;

எனில், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறலொன்று இருந்துள்ளது என உறுதிப்படுத்தலாம்.

**25.** (1) சபை 24 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையொன்றை உறுதிப்படுத்துமிடத்து, சபை அதன் உறுதிப்படுத்துகையை எந்த விளையாட்டு வீரருக்கு அல்லது ஆளுக்கு எதிராக பாதகமான பகுப்பாய்வு சார்ந்த கண்டறிகை செய்யப்பட்டதோ, அந்த விளையாட்டு வீரருக்கும் அல்லது ஆளுக்கும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான தேசிய குழுமத்திற்கும், சர்வதேச சம்மேளனத்திற்கும், தேசிய விளையாட்டுக் கழகத்திற்கும் மற்றும் ‘‘டபிள்யு எ டி எ இற்கும்’’ எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான விதியின் மீறுகையை சபை உறுதிப் படுத்தினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(2) சபை அத்தகைய உறுதிப்படுத்துகையொன்றைச் செய்யும்பட்சத்தில், அத்தகைய உறுதிப்படுத்துகையைப் பற்றி 23ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை ஒழுக்காற்றுக் குழாமுக்கு அறிவித்தலும் வேண்டும் என்பதுடன், விதிகளால் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய வழிகாட்டுநெறிகளுக்கிணங்க ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை ஒழுக்காற்றுக் குழாமினால் விசாரணையொன்று மேற்கொள்ளப் படவேண்டுமென வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்.

(3) அதன்மீது, சபை மீறுகைக்கு இயைபானதும் அவற்றிடம் உள்ளதுமான எல்லா ஆவணப்படுத்துகையையும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை ஒழுக்காற்றுக் குழாமுக்கு அனுப்புதல் வேண்டும்.

**26.** (1) (அ) இருபத்துமுன்றாம் பிரிவின் நியதிகளின்படி ஒழுக்காற்று குழாம் ஒன்றினால் ; அல்லது

மேன்முறையீடு.

(ஆ) ஐந்தாம் பிரிவின் நியதிகளின்படி கோரப்பட்ட ரியுஇ ஒன்றை விளையாட்டு வீரர் ஒருவருக்கு அளிக்க மறுக்கும் முகவராண்மையின் முடிவொன்றினால்,

இடருற்ற எவரேனும் விளையாட்டு வீரர் அல்லது ஆள், முடிவு ஆக்கப்பட்ட முடிவு அவருக்குத் தெரிவிக்கப்பட்டதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மேன் முறையீட்டுக் குழாமிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) மேன்முறையீட்டுக் குழாமின் முடிபானது இறுதியானதும் முடிபானதுமாகும்.

(3) அமைச்சர், விதித்துரைக்கப்படக்கூடியவாறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான விதிகளின் மீறுகையினின் றெழும் விடயங்கள் தொடர்பில் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கு சட்டம் மற்றும் விளையாட்டுத்துறை மருத்துவம் ஆகிய துறைகளில் சிறப்புப் பெற்றவர்களான ஆறு உறுப்பினர் களைக் கொண்ட மேன்முறையீட்டுக் குழாம் ஒன்றை நியமித்தல் (இது இதனகத்துப்பின்னர் ''மேன்முறையீட்டுக் குழாம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேண்டும்.

*மேன்முறை யீட்டுக் குழாமின் பாதகமான முடிபொன்றின் விளைவுகள்.*

**27**. (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி விசாரணையொன்றின் மீது குழாமின் முடிபு ஒவ்வொன்றிற்கும் எதிராக அத்தகைய முடிபால் இடருற்ற திறத்தவரொருவர் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றும் சி எ எஸ் இற்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், டபிள்யு எ டி எ சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) எவரேனும் விளையாட்டு வீரர் இலங்கைக்கு ஏற்புடைத் தான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விளையாட்டு வீரர் டபிள்யு எ டி எ சட்டக்கோவையின் ஏற்புடைத்தான ஏற்பாடுகளின் நியதிகளின்படி தண்டிக்கப்படலாம். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகைக்கு ஏற்புடைத்தானவாறு டபிள்யு எ டி எ சட்டக்கோவையில் அடங்கியுள்ள தண்டனைகளைத் தருகின்ற விதிகள் ஆக்கப்படலாம்.

## பாகம் V

### *நிதி*

**28.** (1) முகவராண்மை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிதியம்.

(2) முகவராண்மையின் நிதியத்தில் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) முகவராண்மையின் பாவனைக்கென பாராளுமன்றத்தால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) முகவராண்மையால் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இலங்கையிலானும்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினும்சரி எத்தன்மையதுமான ஏதேனும் மூலவளத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், அன்பளிப்புக்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் முகவராண்மையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

(3) முகவராண்மையின் நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) முகவராண்மையால் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் அத்தகைய நிதியத்தி லிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**29.** முகவராண்மையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். முகவராண்மை யின் நிதியாண்டு.

**30.** (1) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை யின் ஏற்பாடுகள் முகவராண்மையின் கணக்குகளின் கணக்காய் விற்கும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

(2) 1991 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்குகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது

31. தவறொன்று ஆட்களின் குழுவொன்றினால் புரியப்படு மிடத்து, அப்போது - ஆட்களின் குழுவினால் புரியப்படும் தவறுகள்.

(அ) அத்தகைய குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றா யின் தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது சேவையாளராக இருந்த ஒவ்வோராளும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய குழு ஒரு கழகமாயின் தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக்கழகத்தின் பங்காளரொருவராக இருந்த ஒவ்வோராளும்,

அவர் தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறுபுரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் என எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாக கருதப்படுதல் வேண்டும்.

நிதியத்திலிருந்து செலுத்தப் படவேண்டிய செலவுகள்.

**32.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் சபையால் அல்லது சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது துடர்ச்சியில் சபையால் உறப்பட்ட ஏதேனும் செலவு முகவராண்மையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய வழக்கில் அல்லது துடர்ச்சியில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் முகவராண்மையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அத்தகைய ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது துடர்ச்சியில் சபையின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது எவரேனும் சேவையாளரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் அல்லது செய்யாமை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய வழக்கில் அல்லது துடர்ச்சியில் அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் அறவிடப்பட்டாலன்றி, முகவராண்மையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**33.** முகவராண்மை பின்வரும் நோக்கங்களுக்காக விதிகளை ஆக்கலாம் :-

(அ) சோதனை முறைகளை கடைப்பிடிப்பதற்கும் பதிவு செய்யப்பட்ட சோதனைக் கூட்டுக்குழுவைத் தாபிப்ப தற்கும் மாதிரிகளைச் சேகரிப்பதற்கும் சோதனை ஆய்வுகூடங்களை ஒப்புதல் செய்வதற்கும் சோதனை ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமங்கள் பற்றிய சட்டக்கோவையின் அடிப்படையில் சோதனை ஆய்வு கூடங்களால் பேணப்படவேண்டிய நியமங்களுக்குமான நடவடிக்கை முறைகளைத் தருதல் ;

(ஆ) மாதிரிகளின் பகுப்பாய்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ;

(இ) மாதிரிகள் தொடர்பில் பெறுபேறுகளின் முகாமைத்துவத்திற்கான நடவடிக்கைமுறை ;

(ஈ) ஏற்புடைத்தான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான விதிகளையும் ஊக்கு பதார்த்தப் பயன் பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையின் விளைவு களையும் குறித்துரைத்தல் ;

(உ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கட்டுப் பாட்டு செயற்பாடுகளைக் குறித்துரைத்தல் ;

(ஊ) எதிர்மறையான பகுப்பாய்வுக் கண்டறிகைகளுக்கும் பாதகமான பகுப்பாய்வுக் கண்டறிகைகளுக்கும் ஏற்புடைத்தான நடவடிக்கை முறைகளையும் மற்றும் விளையாட்டு வீரர் ஒருவரின் தற்காலிக இடை நிறுத்தத்தை யும் மற்றும் விளையாட்டு வீரர் ஒருவரின் இடைநிறுத்தத்தையும் நெறிப்படுத்தும் கோட்பாடு களையும் குறித்துரைத்தல் ;

(எ) ரியுஇ இன் அளிப்புடன் தொடர்புபட்ட விடயங்களைக் குறித்துரைத்தல் ;

(ஏ) மாதிரிகளை சோதிப்பதற்கான சர்வதேச நியமங்களின் சட்டக்கோவையின் அடிப்படையில் மாதிரிகளின் சோதனைக்கான நியமங்களுக்கான இலங்கைச் சட்டக் கோவையைக் குறித்துரைத்தல் ;

(ஐ) தடைசெய்யப்பட்ட விளையாட்டு வீரரின் திரும்பி வருவதற்கான நடவடிக்கைமுறை ;

(ஒ) சுயேச்சைப் பார்வையாளர்களுக்கு அணுக்கம் அளிப்பதற்கான நடவடிக்கைமுறை ;

(ஓ) போட்டியில் விளையாட்டு வீரர்களின் சோதனை தொடர்பில் முகவராண்மையால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ; அத்துடன்

(ஔ) போட்டியில் இல்லாதபோது விளையாட்டு வீரர்களின் சோதனை தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் முகவராண்மையால் ஆக்கப்பட்ட விதியொன்று அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுறுதல் ஆகாது.

ஒழுங்கு விதிகள்.

**34.** (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படவேண்டிய இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் எவ்வொழுங்கு விதிகள் தேவைப்படுத்தப் பட்டதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடியளவு விரைவாக ஆனால் அது ஆக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குப் பிந்தாமல் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்

செல்லுபடியாக்குதல்.

**35**. 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படியும் மற்றும் முகவராண்மையால் வகுத்துத் தொகுக்கப்பட்டதும் 2009, ஏப்பிறல் மாதத்திலிருந்து பயனுறுவதும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன் முன்னர் வலுவிலுள்ளதுமான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான இலங்கை முகவராண்மையின் சட்டக்கோவையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையால் செய்யப்பட்ட எல்லாச் செயற்பாடுகளும் விடயங்களும் அல்லது கருமங்களும் எடுக்கப்பட்டவையும் நடைமுறைப்படுத்தப்பட்டவையுமான முடிவுகளும் இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவால் நியமிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையால் செய்யப்பட்ட செயற்பாடுகளாகவும் விடயங்களாகவும் மற்றும் செய்யப்பட்டவையும் நடைமுறைப் படுத்தப்பட்டவையுமான முடிபுகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், செல்லுபடியானவையாகவும் செல்லு படியானவகையிலும் செய்யப்பட்டவையாகவும் கருதப்படுதலும் வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களும் அது தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை களுக்கும் எதிராக இத்தால் நட்டோத்தரவாதம் செய்யப்படு கின்றனர்.

பொருள் கோடல்.

**36**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

''விளையாட்டு வீரர்'' என்பது சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் அல்லது ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சி யில் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றுபவரான எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

''சி எ எஸ்'' (CAS) என்பது விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம் எனப் பொருள்படும் ;

''கோவை'' என்பது காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட வாறான கொபென்ஹேகனில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மையால் (டபிள்யு எ டி எ) 2003, மாச்சு 5 ஆம் தேதியன்று ஏற்றங் கீகரிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான உலக சட்டக்கோவை எனப் பொருள்படும் ;

''போட்டி'' என்பது ஒரு ஒற்றை ஓட்டப்பந்தயம், போட்டி, விளையாட்டு அல்லது ஒற்றை மெய்வல்லுநர் போட்டி எனப் பொருள்படும் ;

''போட்டியின் போதான சோதனை'' என்பது சர்வதேச சம்மேளனம் ஒன்றின் அல்லது வேறு இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் விதிகளில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, போட்டியின் போதும் மற்றும் போட்டியில் இல்லாத போதுமான சோதனைக்கு இடையில் வேறுபடுத்திக்காட்டும் நோக்கங்களுக்காகக் குறிப்பான போட்டியொன்று தொடர்பில் சோதனைக்கென விளையாட்டு வீரரொருவர் தெரிவுசெய்யப்படும் ஒரு சோதனை எனப் பொருள்படும் ;

''விளையாட்டு வீரர் ஒருவரைப் பயிற்றுவித்தலுடன் தொடர்புடைய ஆள்'' என்பது காப்பாளர், போட்டித் தீர்ப்பளிப்பவர், நடுவர், ஆட்ட நடுவர், விளையாட்டுத் துறை முகாமையாளர், பயிற்சி வழங்குநர், பயிற்றுநர், விளையாட்டு இணையுரிமையாளர், தசைபிடிப்பவர், இயற்பியல், மருத்துவவியலாளர் அல்லது துணை மருத்துவ வியலாளர் ஒருவராகவுள்ள ஒவ்வோராளை யும் உள்ளடக்கும் ;

''விளையாட்டு ஒழுங்கமைப்பு'' என்பது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான ஆளும் அமைப்பாக சேவையாற்றும் ஏதேனும் ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும் ;

''சோதனை செய்தல்'' என்பது சோதனைப் பகிர்வுத் திட்டமிடல், மாதிரிகளை சேகரித்தல், மாதிரிகளைக் கையாளுதல் மற்றும் ஆய்வுகூடத்திற்கு மாதிரிகளைக் கொண்டு செல்லுதல் என்பன சம்பந்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்தும் செயல்முறையின் பாகங்கள் எனப் பொருள்படும் ;

"நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பு (ரியுஇ)" என்பது நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பிற்கான நியமங்களுக்கிணங்க அளிக்கப்பட்ட விலக்களிப்பொன்று எனப் பொருள்படும் ;

"பயன்பாடு" என்பது ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை எத்தன்மையதுமான ஏதேனும் வழிமுறையில் பிரயோகித்தல், ஊசிமூலம் ஏற்றுதல் அல்லது நுகர்தல் எனப் பொருள்படும் ;

"ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை (டபிள்யு எ டி எ)" என்பது சுவிற்சர்லாந்தில் விளையாட்டு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச சமவாயத்தின் நோக்கங்களுக்கென 1999, நவெம்பர் 10 ஆம் தேதி தாபிக்கப்பட்ட அமைப்பு எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**37**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்